**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**OS No: 175/2019 தேதி: 29.10.2025**

**வா.சா.1 – பசுபதி**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இந்த வழக்கில் ஏற்கனவே என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். 07.07.1984 ம் தேதியிட்ட 1ம் வாதி, ராஜீ மற்றும் சுப்பம்மாள் செய்து கொண்ட பதிவு பாகவிஸ்தி பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.01.2018 ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு இனாம்செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.01.2018 ம் தேதியிட்ட 2ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு இனாம்செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வில்லங்கசான்றிதழ்கள் வரிசை எண்ணம் 3 அசல் **வா.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 04.06.1974 ம் தேதியிட்ட சர்வே எண்.46/1 நில உடைமை குறிப்போடு நகல் **வா.சா.ஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 02.08.2018 ம் தேதியிட்ட சர்வே எண்.46/1A க்கான கணினி பட்டா கணினி நகல் **வா.சா.ஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.03.2017 ம் தேதியிட்ட சர்வே எண்.46/1B க்கான கணினி பட்டா கணினி நகல் **வா.சா.ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அருப்புக்கோட்டை கூடுதல் மாவட்ட நீதிமன்ற பிராது நகல் **வா.சா.ஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அருப்புக்கோட்டை கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் 3ம் பிரதிவாதி தாக்கல் செய்த மனு நகல் **வா.சா.ஆ 9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.